**லக்கல - பல்லேகம பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லக்கல - பள்ளேகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நன்கொடையாகக் கிடைத்த ரூபா 2,801,950 பெறுமதியான இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 532,385 என சொத்துக்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனத் ஈடுபாட்டிற்கு வருவாயிலிருந்து பங்களிப்பு செய்யும் கணக்கில் செலவு வைத்து மீண்டும் தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கப்பட வேண்டும் | சீராக்கம் செய்வதாக அறிய தருகின்றேன் |
| (ii) | நிர்மாணக் கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 247,605 குறைவாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கப்பட வேண்டும் | சீராக்கம் செய்வதாக அறிய தருகின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற வைப்புகளின் கூட்டுத் தொகை பெறுமதி ரூபா 210,923 ஆக இருந்த போதிலும் ரூபா 84,375 ஆக கணக்கிடப் பட்டிருந்தமையால் செலுத்தப்பட வேண்டிய வைப்புக் கணக்கில் ரூபா 134,248 பெறுமதி குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கப்பட வேண்டும் | சீராக்கம் செய்வதாக அறிய தருகின்றேன் |
| (iv) | முன்னைய ஆண்டிற்கு அல்லது மீளாய்வாண்டிற்கு உரித்தற்ற வருமானமான ரூபா 14,811 தொகையை கிடைக்க வேண்டிய வட்டிக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கப்பட வேண்டும் | சீராக்கம் செய்வதாக அறிய தருகின்றேன் |
| (v) | பெற வேண்டியவ ட்டிக் கணக்கு மீதி ரூபா 406,394 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு சீராக்கப்பட வேண்டும் | சீராக்கம் செய்வதாக அறிய தருகின்றேன் |

**(ஆ) இணங்காத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 33,506,079 பெறுமதியான கணக்குகள் 15 இற்கு உரிய மீதிகள் மற்றும் அவற்றுக்கு பயன்படுத்தப்பட்ட உப ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளில் காண்பிக்கப்படும் மீதிகள் ஆகியவற்றுக்கு இடையில் ரூபா 5,435,970 வித்தியாசம் இருப்பது அவதானிக்கப்பட்டது. | குறித்த கணக்கு மீதிகள் அட்டவணையுடன் ஒப்பிட்டு வேறுபாடுகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 243,120 ஆகக் இருந்ததுடன் அதை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு சீராக்கப்பட வேண்டும். | சீர் செய்யவதாக அறியதருகின்றேன் |

(ஈ) **கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| ரூபா 27,616,455 பெறுமதியான 12 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளக் கூடிய சான்றுகளை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி கூற்றுக்களில் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆவணங்களை தயாரித்து எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 396 | 06 மாதங்கள் கடந்த 03 காசோலைகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களின் பிரகாரம் சீராக்குவதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV (3.5) ஆம் பிரிவு | 40% இற்கு எல்லையுடன் இணங்காமல் 05 உத்தியோகத்தர்களுக்கு இடர் கால கடன் வழங்கப்பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் கடன் கொடுப்பனவின் போது தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி முறைகள் 178 (1) உப விதி முறை | சபையின் முன்மொழிவு வொன்ற நிறைவேற்றப்பட்டு பொதுச் சபை கேள்வி சபையாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பிரதேச சபை விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் இலக்கம் 1914/ 40 மற்றும் 2015 மே மாதம் 15 ஆம் திகதிக்குரிய வர்த்தமானி அறிக்கை IV (அ) பிரிவின் | சபையிடம் அனுமதி பெறாது கூட்டங்களுக்கு சமூகமளிக்காத 11 உறுப்பினர்களுக்கு ரூபா 165,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. | வர்த்தமானி அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | உறுப்பினர்கள் தாம் சமூகமளிப்பதில்லை என தலைவரிடம் தொலைபேசி மூலம் அறிவித்திருந்ததாக அறியத் தருகிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,567,646 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 659,500 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 538,250 | 837,412 | 435,843 | 401,569 | 705,056 | 169,107 | 302,956 | 861,151 |
| (ii) | வாடகை | 68,600 | 297,470 | 296,820 | 650 | 41,600 | 54,190 | 39,770 | 14,420 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 525,000 | 401,981 | 385,231 | 16,750 | 250,000 | 322,800 | 322,800 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,800,000 | 2,679,349 | 1,204,562 | 1,474,787 | 2,800,000 | 1,723,353 | 913,155 | 810,198 |
| | மொத்தம் | 2,931,850 | 4,216,212 | 2,322,456 | 1,893,756 | 3,796,656 | 2,269,450 | 1,578,681 | 1,685,769 |

**2.2.2 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 177,783 பெறுமதியான வாடகை நிலுவை வருமானத்தை (ட்ரக்டர்) தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை வருமான மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். | நிலுவை வாடகை பணத்தை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கடை வாடகை நிலுவைகள் மற்றும் வீட்டு வாடகை நிலுவைகள் என ரூபா 110,430 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை தொகையில் விரைவில் அறவிட வேண்டும | நிலுவை வாடகை பணத்தை எதிர்வரும் காலங்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**2.2.3 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய கொங்கிரீட் சார்ந்த உற்பத்திப் பொருட்கள், கோழிப் பண்ணை, நெல் ஆலைகள் உள்ளிட்ட 72 நிறுவனங்களுக்குரிய சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்குத் உரிய கணிப்பீடுகள் மேற்காண்டு அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணிப்பீடொன்று நடத்தப்பட்டு சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் தேசிய சுற்றாடல் சட்டத்திற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் நிர்மாணக்களுக்கு உரிய சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**2.2.4 நீர் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய நீர் இணைப்புக் கட்டணமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 231,897 பெறுமதியான தொகையை பல ஆண்டுகளாக அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையிலுள்ள நீர்க் கட்டணங்கள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். | உடனடியாக அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்குள் அமைந்துள்ள விளம்பரப் பதாதைகளிற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்களைத் தீர்மானிக்கும் விதம் குறித்து வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து வருமானங்களை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருவாயை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள விளம்பரப் பதாதைகளுக்கு உரிய கட்டணங்களை அறவிடத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**2.3 மிகை அறவீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(3) உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த ஆட்களுக்கு எதிராக என்னால் மீளாய்வாண்டில் ரூபா 362,772 பெறுமதியான மிகை அறவீடொன்று விதிக்கப்பட்டிருந்தது. | மிகை அறவீட்டுப் பெறுமதி அறவிடப்பட வேண்டும் | அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 17 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனத்து உபவிதி விதிகள் விதிக்கப்பட்டு சபை செயற்பாடுகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். | குறித்த செயற்பாடுகளுக்காக உப விதிகளை விதிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த துணை விதிகளுக்கு இணங்க சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்கு உரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் நிதி இலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயற் திட்டம் தயாரிக்கப்படும் போது நிதி இலக்குகளும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர் வரும் காலத்தில் சரி செய்வதாக அறியத் தருகிறேன். |

**(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகாரப் பிரதேச்த்தில் மாதமொன்றில் சேரும் 03 தொன் அளவிலான கழிவப்பொருட்கள் பிரதேசத்தின் இடமொன்றில் வேறுபடுத்தாமல் முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டிருந்தன. | கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப் பட வேண்டும். | கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக தேவையான காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கு காணப்படாதிருந்ததுடன் மஹாவலி அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக ஆரம்ப செயற்பாடுகள் அல்லது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அறிய தருகின்றேன் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) கெப் வண்டியொன்று பழுதுபார்ப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் உள்ளராட்சி மன்றத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,343,710 தொகை கெப் வண்டியின் திருத்தங்கள் மேற்கொள்ளப் படாமையால் கொடுப்பனவு செய்ய முடியாமையால் பொது வைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதும் உரிய பெறுமதி சபை நிதியத்தில் காணப்படவில்லை. | கெப் வண்டியின் திருத்தங்களை மேற்கொள்வதற்காக கிடைத்த பணத்தை சபை நிதியத்தில் வைத்திருக்க வேண்டும். | சரி செய்வதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் இருந்து பொது வைப்புக் கணக்கில் நிறத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 79,986 தொகையான இடர் கடன் தவணைப் பணம் குறித்த உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த போதும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன்தொகை தீர்வு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதாக அறிய தருகின்றேன். |
| (இ) 2016 ஆம் ஆண்டிற்கான மாகாண இறுதி அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொம்போஸ்ட் உரத் தொட்டிகளுக்கு உரிய ரூபா 78,270 ஆன மீதி வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருக்கும் தொகை தீர்வு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதாக அறிய தருகின்றேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபையின் 15 பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்த வெற்றிடங்களில் 13 இரண்டாம் மட்ட பதவியணியினராக இருந்தனர். | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் | வெற்றிடங்கள் தொடர்பாக உயர் நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளதாக அறநிய தருகின்றேன் |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட நிர்வாக உதவியாளர் பதவிக்குரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 128,907 இடர் கடன் தொகை மற்றும் ரூபா 1000 விழா முற்பணத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடன்தொகை விரைவில் அறவிடப்பட வேண்டும் | சரி செய்வதாக அறிய தருகின்றேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு உரித்தாகக் காணப்படுகின்ற காணி, கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் உள்ளடங்கிய சொத்துக்களை, சொத்துக்கள் பதிவேடுகளில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சகல சொத்துக்களையும் பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சகல சொத்துக்களையும் பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருத்தல்.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு உரிய கெப் ரக வாகனம் விபத்துக்கு உள்ளானதால் அண்ணளவாக ரூபா 1,000,000 தொகை செலவில் பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பாக நி.பி 104 (3) இன் பிரகாரம் பரிசோதனை நடத்தப்பட்டு நட்டத்துக்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் இனங்காணல் மற்றும் நட்டத்தை அறவிடுவதற்கு நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட்டு உள்ளனர் என அறியத் தருகிறேன். |

### 3.4.3 சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சந்தை இடத்தில் காணப்படும் இறைச்சி மற்றும் மீன் விற்பனை நிலையத்தின் கடைகள் 07 மற்றும் நிரந்தர விற்பனை நிலையங்களைக் கொண்ட கடைகள் 06 ஆகியவற்றை தகைமையுள்ள நபர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நபர்களுக்கு வழங்கி சபைக்கு வருமானமொன்று உழைக்கப்பட வேண்டும். | வுழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருக்ன்றேன் |

### 3.4.4 கையேற்காத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையால் பயன்படுத்தப்படும் 05 வாகனங்களை சபைக்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்கப்படாத வாகனங்களை கையேற்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | WPPF - 7381 கெப் வாகனம் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களும் சபைக்கு கையேற்கப்பட்டு இருப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.4.5 செயலற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகிற 05 வாகனங்கள் செயலற்ற நிலைமையில் காணப்படுவதுடன் பழுதுபார்த்து பாவனைக்கு எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பழுது பார்த்து பாவனைக்கு எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர் வரும் ஆண்டில் பாவனைக்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த வருமான அனுமதப்பத்திரங்கள் உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளாமை காரணமாக ரூபா 10,800 தண்டப்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் தண்டப்பணத்தை பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து மிகை அறவீடு செய்யப்பட வேண்டும் | பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

### 3.6 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| லக்கல பிரதேச சபைக்கு உரிய கெப் ரக வாகனம் 2019 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்டிருந்தமை தொடர்பாக மோட்டார் வாகன பரிசோதகரால் சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் குறித்த வண்டியின் தடுப்பு வேறுபடும் வகையில் இரும்பு வெட்டு ஆயுதமொன்றினால் வெட்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பொறுப்பானவர்கள் இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் தற்போது பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். |

**3.7 பெறுகை**

**3.7.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் மீளாய்வாண்டில் ரூபா 922,004 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ஏதிர்வரும் காலங்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**3.8 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவகத்திக் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுத்தபட வேண்டும். | ஏதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்த வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் 01 குழு கூட்டம் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட படி நடாத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்குரியதாக முறையாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |